1973 பிப்ரவரி 5]

மின் இணைப்பு

* 17 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் எல்லா கிராமங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு விட்டதா ?

(இ) இல்லையெனில் இன்னும் எத்தனை கிராமங்களுக்கு அளிக்கப்படவேண்டும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) இந்த வினாவுக்கு இடமில்லை.

DR. H. V. Hande rose.

MR. DEPUTY SPEAKER : Your question must relate to North Arcot district.

DR. H. V. HANDE : I am aware of it. I am talking only about North Arcot district. Are the Government aware that while it is said electricity connection is given to most of the villages of North Arcot, due to the power cut in most of the places in North Arcot district electricity connection for even pumpsets is not being given with the result the crop is withering. May I know whether Government are aware of the fact because of inadquante power supply, crop is withering and may I know what are the steps taken by Government to see that this is immediately rectified ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு அளிக்கப்பட்டுவிட்டதா என்பது கேள்வி. அதற்கு ' ஆம் ' என்று பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இருக்கின்ற சூழ்நிலையை வைத்துக் கொண்டு மின்சாரம் எல்லா கிராமங்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இன்றைக்கு அகில இந்தியாவிலுமே மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பதை அனைவரும் அறிவார்கள். தமிழ் நாட்டிலே சென்ற ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால் மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்

உள்ளதை வைத்து, நல்ல முறையில் மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 25 சதவிதம் மின்சார வெட்டு இருந்தது. இப்போது அது 40 சதவிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சிறந்த முறையில் விநியோகம் செய்ய அதிகாரிகள் ஆலோசித்து வருகிருர்கள்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether speedy steps will be taken to see that agricultural pumpsets are not devoid of power?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அதைப் பற்றித்தான் சொன்னேன். விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் மின்சாரம் கொடுப்பதற்கு உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் கடந்த மூன்று நாட்களாக அதில் சில சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் இப்போது ஆந்திர மாநிலத்தில் ஸ்டிரைக் நடைபெறுவதால், நிலக்கரி நமக்கு போதிய அளவு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 18 வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிறுவனங்களுக்கும், வீடுகளுக்கும் மின்சார இணைப்பைப் பெற எலக்ட்ரிகல் (E.B.) லைசென்ஸ் பெற்றவர்கள் தான் செய்ய வேண்டுமென்றும், அப்படி மீறி செய்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் விதிகள் ஏதேனும் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், அப்படி அதற்காக தண்டிக்கப்பட்டவர்கள் சென்ற 1970–71-ம் ஆண்டில் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) சேலம் மாவட்டத்தில் நான்கு பேர்களின் மேல் வழக்குத் தொடுக்கப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இப்படி சில நிறுவனங்களில் மின்சார இணைப்புக் கொடுப்பதற்கு, லைசென்ஸ் பெற்றவர்கள் லைசென்ஸ் பெருதவர்களுக்கு கையழுெத்துப்